தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

இன்றைய வேளாண் செய்திகள்

24.09.2012 A.M

24th Sep 20012

## உருளைகிழங்கு பயிருக்கு மாறும் சத்தி விவசாயிகள்

சத்தியமங்கலம் சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள் உருளை கிழங்கு பயிரிட்டுள்ளனர்.சத்தியமங்கலம் பகுதி விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. இங்கு வசிக்கும் மக்கள், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த தொழில்களை நம்பியே தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.தற்போது தங்கள் வயல்களில் கரும்பு, மஞ்சள், பருத்தி, வாழை, நெல், புகையிலை, செண்டுமல்லி மற்றும் மல்லிகை பூ ஆகியவைகள் சாகுபடி செய்து வருகின்றனர்.இந்த விவசாய பொருட்கள் தொடர்ந்தும், அதிகமாகவும் உற்பத்தி செய்தபோதும் விலை கிடைப்பதில்லை.இந்த நிலையில் மாற்று பயிருக்கு மாற இப்பகுதி விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். முன்பு உருளைகிழங்கு, கேரட், முட்டைகோஸ் மற்றும் காளிஃபிளவர் போன்ற காய்கறி பயிர்கள், ஊட்டி போன்ற மலைப்பகுதியில் பயிரிட்டு வந்தனர்.சத்தியமங்கலம் அடுத்துள்ள திம்பம் மலைப்பகுதியிலும் ஊட்டி போன்ற தட்பவெப்பம் நிலவி வருவதால், அங்குள்ள விவசாயிகள் இந்த காய்கறி பயிர்களை பயிரிட்டுள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் இந்த காய்கறிகளை மேட்டுப்பாளையத்துக்கு விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.இந்த காய்கறி பயிர்களில், குறிப்பாக உருளைகிழங்கு வெய்யில் இருக்கும் பகுதியிலும் விளைவதாக தெரியவந்ததால், சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் உருளைகிழங்கு பயிரிட தொடங்கியுள்ளனர்.இதற்காக தற்போது சத்தியமங்கலம் அருகே உள்ள அரியப்பம்பாளையம் பகுதியில் விவசாயி ரத்தினசாமி தன் விவசாய நிலத்தில் மாதிரிக்காக உருளைகிழங்கு பயிரிட்டுள்ளார்.மூன்று மாதத்தில் பலன்தரும் உருளைகிழங்கு பயிர்,

சத்தியமங்கலம் பகுதியில் வீசும் வெப்பத்தினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் நல்ல விளைச்சல் கொடுத்தால், மற்ற விவசாயிகள் உருளைகிழங்கு பயிருக்கு மாற முடிவு செய்துள்ளனர்.

| 24th Sep 20012 | விவசாயிகளுக்கு ரூ. 71 லட்சம் கடன்: ஐ.ஓ.பி.,வழங்கல் |
|---|---|

துறையூர்: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சிக்கத்தம்பூர் கிளை சார்பில், விவசாயிகள் மாதத்தையொட்டி, 71 லட்சம் ரூபாய் வேளாண் கடன் வழங்கப்பட்டது.இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் ஆகஸ்ட், செப்டம்பர் மாதம் விவசாயிகள் மாதமாக கடைபிடிக்கப்படுகிறது. இவ்வங்கி, யுனிவர்சல் சம்போ ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து, விவசாயிகளுக்கு ஹெல்த்கேர் மெடிகிளைம் பெறும் வசதியுடன், இன்சூரன்ஸ் வழங்குகிறது. இதற்கான விழா திருச்சி மாவட்டம், துறையூர் அருகேயுள்ள ஐ.ஓ.பி., வங்கி சிக்கத்தம்பூர் கிளை சார்பில், அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்தது.விழாவில், சிக்கத்தம்பூர், ஒட்டம்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாய கடன் அட்டை வைத்துள்ளவர்கள் மற்றும் கறவை மாடு, பயிர் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்த, 102 விவசாயிகளுக்கு, 71 லட்சம் ரூபாய் வேளாண் கடன் வழங்கப்பட்டது. 25 பேருக்கு ஹெல்த்கேர் பாலிஸி வழங்கப்பட்டது.விழாவுக்கு வங்கி தலைமை மண்டல மேலாளர் நாகேஷ் பட்டா தலைமை வகித்தார். பஞ்சாயத்து தலைவர் சிவசுப்ரமணியன் முன்னிலை வகித்தார். வங்கி கிளை மேலாளர் யோகராஜ் வரவேற்றார். முதன்மை வங்கி மாவட்ட மேலாளர் ராமதாஸ், இன்சூரன்ஸ் பிரிவு அதிகாரி ஜெகதீசன் பேசினர். கிராம விவசாயிகள் பங்கேற்றனர்.

| 24th Sep 20012 | மக்காச்சோளம் இடுபொருள் வழங்க ரூ.1.12 கோடி ஒதுக்கீடு: கலெக்டர் |
|---|---|

பெரம்பலூர்: "மக்காச்சோளம் விவசாயிகளுக்கு இடுபொருள் வழங்க, ஒரு கோடியே, 12 லட்சத்து, 89 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என, கலெக்டர் தரேஷ் அஹமது தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்டத்தில், மானாவாரி மக்காச்சோளம் மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, வேளாண்மைத்துறை சார்பாக இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.இந்த ஆண்டில் கூடுதலாக மானாவாரி மக்காச்சோளம் பயிரிட, சிறு, குறு விவசாயிகளுக்கு, 25 சதவீத மானியத்தில், ஒரு ஏக்கருக்கு, 2,000 ரூபாய் வீதம், 5,644 ஏக்கருக்கு, ஒரு கோடியே, 12 லட்சத்து, 89 ஆயிரம் ரூபாய் மதிப்பில், இடுபொருட்கள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தி பயிருக்கு நுண்சத்து பற்றாக்குறையை நீக்கி, மகசூலை அதிகரிக்க இலைவழி மூலம் தெளிக்கும், நுண்ணூட்ட உரம், 50 சதவீத மானியத்தில், 10 ஆயிரத்து, 750 ஏக்கர் பரப்புக்கு, இடுபொருட்கள் வழங்க, 15 லட்சத்து, ஐந்தாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.எனவே மக்காச்சோளம் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் நீண்ட இழை பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள், அந்தந்த பகுதி வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குனரை அணுகி, மானிய விலையில் இடுபொருட்கள் பெற்று பயன் பெறலாம்.

| 24th Sep 20012 | வேளாண்மை கடன் "தாராளம்' தஞ்சை கலெக்டர் பரிந்துரை |
|---|---|

தஞ்சாவூர்: ""நடப்பாண்டு, டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடியை மேற்கொள்ள, வேளாண்மை கடன்களுக்கு முன்னுரிமை அளித்து, விவசாயிகளை அலைக்கழிக்காமல் வழங்க வேண்டும்," என, கலெக்டர் பாஸ்கரன் பேசினார்.தஞ்சை மருத்துவக்கல்லூரி ரோட்டிலுள்ள ஐ.ஓ.பி., மண்டல அலுவலகத்தில், சம்பா சாகுபடியாளர்களுக்கு வங்கிக்கடன் வழங்குவது குறித்த சிறப்பு ஆலோசனை கூட்டம் நடந்தது.இதில், கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகித்து பேசியதாவது:நடப்பாண்டு, டெல்டா மாவட்டங்களில், சம்பா சாகுபடியை விவசாயிகள் தடையின்றி மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான், கடந்தாண்டை விட, நெல் உற்பத்தி இலக்கை தாண்டி, சாதனை படைக்க, பல்வேறு நலஉதவிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது.முதல்வரின் சம்பா பயிர் சாகுபடி திட்டத்தில், வேளாண் இடுபொருட்கள், சமுதாய நாற்றங்கால், உரங்கள் ஆகியவற்றுக்கு பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. இதற்காக, கூட்டுறவு, வேளாண்மை, பொதுப்பணி, பொறியியல் போன்ற பல்வேறு துறை அதிகாரிகளை ஒருங்கிணைத்து, கடைக்கோடி டெல்டா விவசாயிக்கும், அரசின் உதவிகள் சென்றடைய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.மேலும் நெல் உற்பத்தியை பெருக்கும் வகையில், வங்கியில் கூடுதல் கடனுதவியை தாமதமின்றியும், அலைக்கழிப்பின்றியும் விவசாயிகளுக்கு வழங்கினால், தண்ணீர் பற்றாக்குறை, இயற்கை சீதோஷ்ண பாதக சூழல் போன்ற தடைகளை கடந்து சாதனை படைக்க முடியும்.இவ்வாறு அவர் பேசினார்.ஐ.ஓ.பி., மண்டல முதுநிலை மேலாளர் ரகுவத்சா சாரி, நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் ரவிக்குமார், முன்னோடி வங்கி மேலாளர் ரவி உள்பட வங்கி அதிகாரிகள், அலுவலர்கள் பங்கேற்றனர்.

| 24th Sep 20012 | பட்டு உற்பத்தி நெசவாளர் சங்க மகாசபை ஒத்திவைப்பு |
|---|---|

கும்பகோணம்: திருபுவனம் பட்டு உற்பத்தி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மகாசபை கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.கும்பகோணம் அருகே உள்ள திருபுவனம் சன்னதிதெருவில், திருபுவனம் பட்டு நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் உள்ளது. தொடர்ந்து லாபத்தில் இயங்கிவரும் சங்கமான திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்கத்தில், 1,800 உறுப்பினர்கள் உள்ளனர். சங்கத்தின் மகாசபை கூட்டம் சங்க தலைமையகத்தில் நடப்பதாக முன் அறிவிக்கப்பட்டிருந்தது.அதன்பின், சங்க மகாசபை கூட்டம் திருபுவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடப்பதாக மாற்றி அறிவிக்கப்பட்டு, நேற்று காலை உறுப்பினர்கள் அங்கு குவிந்தனர். மகாசபை கூட்டத்துக்கு வந்த சங்க தனி அலுவலர் மனோகரன், சங்க உறுப்பினர்களிடம் ஏற்பட்ட கூச்சல், குழப்பம் காரணமாக மகாசபை கூட்டத்தை, மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தார். சட்டம், ஒழுங்கு பிரச்னை ஏற்படாமல், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, திருவிடைமருதூர் போலீஸ் டி.எஸ்.பி. இளங்கோவன் தலைமையில், திரளான போலீசார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். இதனால் காலை முதல், திருபுவனம் பெரும் பரபரப்பாக இருந்தது.* கும்பகோணம் அருகே உள்ள திருபுவனம் சன்னதிதெருவில், சோழன் பட்டு நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் உள்ளது. சங்கத்தில், 917 உறுப்பினர் உள்ளனர். சங்கத்தின் மகாசபை கூட்டம், தனிஅலுவலர் மோகன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில், வரவு- செலவு அறிக்கை சமர்ப்பித்தல், தணிக்கை அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர் சேர்ப்பது உள்ளிட்ட, பல தீர்மானங்கள் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.

| 24th Sep 20012 | செப்., 28ல் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் |
|---|---|

தஞ்சாவூர்: விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும், 28ம் நடக்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்ட அறிக்கை:தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும், 28ம் தேதி காலை, பத்து மணிக்கு கலெக்டர் தலைமையில் நடக்கிறது. இதில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இக்கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாய தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்கலாம்.கூட்டத்தில் பங்கேற்று கருத்துக்களை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும், தங்கள் பெயர், ஊர்

மற்றும் தாலுக்காவை, காலை, எட்டரை மணி முதல், பத்து மணிக்குள் கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.ஒவ்வொரு தாலுக்காவுக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல், இரண்டு பேர் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க அனுமதிக்கப்படுவார்கள். எனவே, விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்று, விவசாயம் சார்ந்த கருத்துக்களை தெரிவித்து பயன்பெறலாம்.

## 24th Sep 20012 | 16 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பை இயற்கை உரம் தயாரிக்க நடவடிக்கை

சிவகங்கை:சிவகங்கை நகரில் சேரும் குப்பைகளில் இருந்து இயற்கை உரம் தயாரிக்க, நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.சிவகங்கை நகராட்சியில்,15 ஆயிரத்து 85 குடும்பங்கள் வசிக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் தினமும் 300 முதல் 350 கிராம் எடையுள்ள குப்பைகள் சேருகின்றன. இதில், 60 சதவீதம் மக்கும் குப்பை. 40 சதவீதம் மக்காத குப்பை. சிவகங்கை நகரில் தினமும் 16.50 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பைகள் சேருகின்றன. இவற்றை ஒரு இடத்தில் சேகரித்து, இயற்கை உரம் தயாரிக்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 1 முதல் 9 வார்டுகள் வரையிலும், 10 முதல்18 வரையும், 19 முதல் 27 வரையிலும் மூன்று மண்டலங்களாக பிரித்து, குப்பை சேரும் விதம் குறித்து, கணக்கெடுப்பு பணி நடக்கிறது.துப்புரவு அலுவலர் ஒருவர் கூறுகையில், ""நாளுக்கு நாள் குப்பைகள் அதிகரிக்கின்றன. வாரச்சந்தை, ஓட்டல்கள், திருமண மண்டபங்களில் அதிகமாக சேருகின்றன. சுந்தர நடப்பு பகுதியில் ஓரிடத்தில் குப்பைகளை சேகரிக்கிறோம். இயந்திரம் மூலம் மக்கும், மக்காத குப்பைகளாக பிரித்தெடுக்கிறோம். மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்போடு, மக்கும் குப்பைகளில் இருந்து விவசாயத்திற்கு பயன்படும் இயற்கை உரம் தயாரிக்க உள்ளோம். இதற்காக ரூ.10 லட்சத்தில் புதிய இயந்திரங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உழவர்சந்தை போன்ற அதிக குப்பைகள் சேரும் இடங்களிலும் இயற்கை உரம் தயாரிக்க, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மக்கள் தங்களது வீடுகளில் தினமும் சேருகின்ற குப்பை களை தனித்தனியே பிரித்தெடுத்து, நகராட்சி துப்புரவு பணியாளர்களிடம் கொடுத்து ஒத்துழைக்க வேண்டும்," என்றார்.

24th Sep 20012 நான்குநேரியில் சான்று விதை உற்பத்தி பயிற்சி

திருவேல்வேலி : நான்குநேரியில் விவசாயிகளுக்கு சான்று விதை உற்பத்தி பயிற்சி ஊரக மேம்பாட்டு மையத்தில் நடந்தது.

விதைசான்றளிப்பு துறையின் சார்பில் நான்குநேரி வட்டத்திலுள்ள தனியார் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் சாகுபடியாளர்களுக்கு அட்மா திட்டத்தின் கீழ் சான்று விதை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து பயிற்சி நான்குநேரி ஊரக மேம்பாட்டு மையத்தில் நடந்தது. பயிற்சிக்கு நான்குநேரி வேளாண்மை உதவி இயக்குநர் முருகேஷ் தலைமை வகித்து பேசினார்.

நான்குநேரி வேளாண்மை அலுவலர் அலாய்ஸ் ராஜன் வேளாண்மை துறையில் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிவித்தார். திருநெல்வேலி விதைச்சான்று உதவி இயக்குநர் அசோக்குமார் விதை உற்பத்தி விதைச்சான்றளிப்பின் நோக்கம், விதையின் நிலைகள் மற்றும் விதைப்பு அறிக்கைகள் பதிவு செய்யும் முறைகள், விதைப்பயிர்களில் வயலாய்வு செய்யும் முறைகள் குறித்து பயிற்சி அளித்தார்.

திருநெல்வேலி விதைச்சான்று அலுவலர் வேலுச்சாமி பயிர்களின் குணாதிசயங்கள், விதைப்பயிர்களில் கலவன்கள் கண்டறியும் முறைகள் மற்றும் விதை பயிர்களில் கலவன் கணக்கீடு செய்யும் முறைகள் குறித்து தெரிவித்தார். நான்குநேரி விதைச்சான்று அலுவலர் சுரேஷ் விதைப்பயிர்கள் அறுவடை செய்யும் முறைகள், விதைகளை அறுவடைக்குப்பின் உலர வைக்கும் முறை, சுத்தி செய்யும் முறைகள் குறித்தும், விதை மாதிரி எடுக்கும் முறைகள் மற்றும் பகுப்பாய்வில் தரம் தேறிய விதைக்குவியலுக்கு சான்றட்டை கட்டும் முறைகள் குறித்தும் தெரிவித்தார்.

திருநெல்வேலி விதை பரிசோதனை அலுவலர் வேளாண்மை அலுவலர் ரெனால்டா ரமணி விதை பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரிகளை முளைப்புத்திறன், சுத்த தன்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலப்பு குறித்து ஆய்வு செய்யும் முறைகள் குறித்து தெரிவித்தார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட உற்பத்தியாளர்கள் மற்றும் சாகுபடியாளர்களுக்கு விதை உற்பத்தி செய்யும் கையேடு வழங்கப்பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நான்குநேரி விதைச்சான்று அலுவலர் சுரேஷ் நன்றி கூறினார்.

| 24th Sep 20012 | சென்னகுணம் விவசாய நிலத்தில் மாநில அளவிலான மகசூல் போட்டி |
|---|---|

திருக்கோவிலூர் : மாநில அளவில் கம்பு பயிர் மகசூல் போட்டி, திருக்கோவிலூர் அடுத்த சென்னகுணம் கிராமத்தில் நடந்தது.விவசாய பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் பல்வேறு பயிர் இனங்களுக்கான மகசூல் போட்டிகள் நடத்தப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக மாநில அளவிலான கம்பு பயிர் மகசூல் போட்டியில் திருக்கோவிலூர் அடுத்த சென்னகுணம் கிராமத்தை சேர்ந்த கார்த்திகேயன் பங்கேற்றார். திருவண்ணாமலை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சக்கரவர்த்தி, விழுப்புரம் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன், வேளாண் அலுவலர் சரவணன் நடுவர்களாக செயல்பட்டனர். சென்னகுணம் கிராமத்தில் உள்ள கார்த்திகேயன் நிலத்தில் அதிகாரிகள் முன் னிலையில் கம்பு அறுவடை செய்து, அளவீடு செய்தனர். வேளாண் உதவி இயக்குனர் கென்னடி ஜெயக்குமார் மகசூல் போட்டியில் பங்கேற்கும் முறைகள் பற்றி முன்னோடி விவசாயிகள், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு விளக்கம் அளித்தார். நீர்ப்பாசன சங்க தலைவர் பழனிவேல், ஊராட்சி தலைவர் கலியன், துணை வேளாண் அலுவலர் புகழேந்தி, உதவி வேளாண் அலுவலர்கள் திருமலை, வெங்கடகிருஷ்ணன், சிவநேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

| 24th Sep 20012 | தோல் கழிவுகளால் விவசாயிகள் பாதிப்பு |
|---|---|

தாடிக்கொம்பு:திண்டுக்கல் அருகே தோல் தொழிற்சாலை கழிவு நீர், குடகனாறு ஆற்றில் கலப்பதால், ஆற்றோர விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தாடிக்கொம்பு அருகே கருங்கல்பட்டி, கோட்டூர் ஆவாரம்பட்டி பகுதிகளில் 600 ஏக்கருக்கும் மேல் விவசாய நிலங்கள் உள்ளன.இப்பகுதியில் பெருமளவில் வாழை சாகுபடியே பிரதான விவசாயமாக உள்ளது. இவற்றில் அதிக அளவிலான விவசாயிகள் அருகிலுள்ள குடகனாற்று பாசனத்தையே நம்பியுள்ளனர். இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக, திண்டுக்கல் அருகே பேகம்பூர்,

குட்டியபட்டி பகுதிகளில் <உள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், குடகனாற்றில் கலக்கிறது. இதனால் இப்பகுதியில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.விவசாயி முனியப்பன்: தோல் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர், தொழிற்சாலைக்கு அருகிலேயே குளம்÷பால் தேக்கி வைக்கப்படுகிறது. மழை காலத்தில் ஆற்றில் நீர் வரத்து ஏற்படும் போது, ஆற்று நீரோடு சேர்த்து திறந்து விடப்படுகிறது. இதன் விளைவாக ஆற்றுப்படுகையில் உள்ள விவசாய கிணறுகளிலும் தோல் கழிவுகள் கலக்கிறது. கிணற்று நீரை குடிநீராக பயன்படுத்த முடியவில்லை. ஆற்றுப்படுகையில் உள்ள சில கிராமமக்கள் ஆற்று நீரையே பயன்படுத்துவதால், நோய்வாய்ப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. மாரியப்பன்: தோல் கழிவு காரணமாக, விவசாய நிலங்களில், வாழையில் மர்ம நோய் தாக்கி அழிந்துவருகிறது. இதனால் மகசூல் நேரத்தில் வாழை இலையில் மஞ்சள் நிறம் ஏற்பட்டு, தாருடன் சாய்ந்துவிடுகிறது. ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் இப்பகுதியில் விவசாயம் முற்றிலும் அழிந்துவிடும்.விவசாயி அந்தோணியம்மாள்: வாழை சாகுபடியில் தான் நோய் தாக்கி நஷ்டம் ஏற்படுகிறது என, வேறு விவசாயம் செய்தால், அதிலும் மகசூல் கிடைப்பதில்லை. கிடைக்கும் மகசூலை விட, அன்றாட கூலி வேலைக்கு சென்றால் கூட அதிக லாபம் கிடைக்கும். வழக்கம் போல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு, நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிடவேண்டும்.

## 24th Sep 20012 | தேயிலை ஏலத்தில் விற்பனை குறைவு

குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏலத்தில் பல வாரங்களுக்கு பிறகு விற்பனை குறைந்ததால் வர்த்தகர்கள் கவலையடைந்துள்ளனர்.

குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 38வது ஏலம் கடந்த 20 மற்றும் 21ம் தேதிகளில் நடந்தது. இதில் மொத்தம் 12.48 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 9.03 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.45 லட்சம் கிலோவும் அடங்கும்.

உள்நாடு மற்றும வெளிநாடு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் பங்கேற்ற போதும், கடந்த பல வாரங்களுக்கு பிறகு குறைந்தளவு தேயிலை விற்பனையானது. ஏலத்தில் 70 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

சாதாரண இலை ரகத்துக்கு 70-73 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 98-120 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் உயர் ரகத்துக்கு 78-82 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 100-135 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக "சிடிசி' டஸ்ட் ரக ஒரு கிலோ தேயிலை

தூளுக்கு 156 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு 200 ரூபாயும் விலை கிடைத்தது. வரும் 27 மற்றும் 28ம் தேதி நடக்கும் 39வது ஏலத்துக்கு 13.44 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

| 24th Sep 20012 | தரமற்ற நாற்றுகளை வினியோகித்த கம்பெனிகள் :கோர்ட்டில் வழக்கு தொடர விவசாயிகள் சங்கம் முடிவு |
|---|---|

ஊட்டி : மலர் சாகுபடி தொழிலின் வீழ்ச்சிக்கு வித்திட்ட, தரமற்ற நாற்று வினியோகம் செய்த நிறுவனத்தினர் மீது கோர்ட்டில் வழக்கு தொடுக்க விவசாயிகள் சங்கம் முடிவெடுத்துள்ளது. நீலகிரியில் தேயிலைக்கு மாற்றாக மலர் சாகுபடி தொழில் ஊக்குவிக்கப்பட்டது. 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர்.
தரமற்ற நாற்று வினியோகம், மார்க்கெட்டிங் வசதியின்மை உட்பட பல காரணங்களால் கொய்மலர் சாகுபடி நலிவடைந்தது; வாங்கிய வங்கி கடனை திருப்பி செலுத்த முடியாமல் தவித்த விவசாயிகள், தொழிலை தூக்கி நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில அரசை வற்புறுத்தினர். நீலகிரி சிறு மலர் சாகுபடியாளர்கள் சங்கம் சார்பில் மாநில அரசுக்கு தொடர்ந்து மனுக்கள் அனுப்பப்பட்டன.
இதன் விளைவாக, விவசாயிகளை பங்குதாரர்களாக கொண்டு கொய்மலர் நாற்று உற்பத்தியை மேற்கொள்ள மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது; இதனால், விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர்.
அதே நேரம்,"பல தனியார் கம்பெனிகள் வினியோகித்த நாற்றுகள் தான் கொய்மலர் சாகுபடி நலிவடைய காரணம்,' என குற்றம் சாட்டிய மலர் சாகுபடி விவசாயிகள் சங்கம், அந்நிறுவனத்தினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வற்புறுத்தியது; இந்த விவகாரத்தில் மாநில வேளாண்மை துறை அமைச்சகம் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி விவசாயிகள் சங்க தலைவர் விசுவநாதன் கூறுகையில்,""விவசாயிகளை பங்குதாரர்களாக கொண்டு கொய்மலர் நாற்றுகளை உற்பத்தி செய்யும், அரசின் திட்டம் நம்பிக்கை அளிக்கிறது.
சமீபத்தில், மாவட்ட கலெக்டர் முன்னிலையில் நடந்த வங்கி மேலாளர்கள் கூட்டத்தில், மலர் சாகுபடி தொழிலை மீண்டும் நிலை நிறுத்தும் வரை கடன் செலுத்த கால அவகாசம் கேட்டுள்ளோம். கொய்மலர் சாகுபடி தொழில் நஷ்டமடைய காரணமாக இருந்த நாற்று கம்பெனிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர, திட்டமிட்டுள்ளோம்," என்றார்.

24th Sep 20012

## மதிப்பு கூட்டு விவசாய விளை பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு



முதர்மபுரி:சமீப காலமாக, வேளாண் விளை பொருட்கள் மதிப்பு கூட்டப்பட்டு, மக்களை கவரும் வகையில் "பேக்கிங்' செய்யப்பட்டு விற்பனைக்கு வருவது அதிகரித்து வருகிறது.

சந்தையில் இது போன்ற பொருட்களுக்கு, மக்கள் மத்தியில் வரவேற்பு இருப்பதால், மதிப்பு கூட்டு பொருட்களை தயார் செய்து விற்பனை செய்வதில், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தீவிரமாக களம் இறங்கிஉள்ளனர்.

வாடிக்கையாளர் சந்தை போட்டி நிறைந்த தற்போதைய சூழ்நிலையில், பெரிய முன்னணி நிறுவனங்கள், தங்கள் உற்பத்தி பொருட்களை வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்க பல்வேறு கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மற்றும் "பேக்கிங்' முறைகளில் மாற்றம் செய்வதில், அதிக அக்கறை காட்டி வருகின்றன.சந்தைக்கு வரும் பொருட்கள், வாடிக்கையாளர்களை கவரும் வகையில் இருந்தால் மட்டுமே, விற்பனை இலக்கை எட்ட முடியும் என்ற நிலை ஏற்பட்டுஉள்ளது. இதனால், பெரிய முன்னணி நிறுவனங்கள் ஆண்டுக்கு, ஐந்து முதல், எட்டு முறை வரை, சந்தையில் தாங்கள் அறிமுகம் செய்யும் பொருட்களின் "பேக்கிங்' உள்ளிட்டவைகளை மாற்றி, விளம்பரம் செய்து, சந்தைப்படுத்தி வருகின்றன.

பழங்கள்:கடந்த காலங்களில், விவசாய உற்பத்தி பொருட்கள், பழங்கள் உள்ளிட்டவை, மொத்தமாக சந்தையில் விற்பனைக்கு வந்தன. இவை, தரம் பிரிக்கப்படாமல், அறுவடை செய்யப்பட்ட நிலையிலேயே விற்பனைக்கு வந்ததாலும், கல், மண், தூசி படிந்திருந்ததாலும், அவற்றை வாடிக்கையாளர்கள் ஒதுக்கும் நிலை இருந்தது.இதே போல் பழங்களையும் தரம் பிரித்து விற்பனை செய்வதில், கடந்த காலங்களில் வியாபாரிகள் அக்கறை காட்டவில்லை. தரமான பொருட்கள் கிடைக்கும் போது, கூடுதல் விலை கொடுத்து வாங்க வாடிக்கையாளர்கள் தயார்

நிலையில் இருப்பதை உணர்ந்து, சமீப காலமாக உணவு உற்பத்தி பொருட்கள், பழங்கள், ஊறுகாய் உள்ளிட்டவைகள் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளன.

மதிப்பு கூட்டு பொருட்களில், ஆரம்பத்தில், பேரீச்சை மற்றும் உலர்ந்த பழங்கள் நன்கு "பேக்' செய்யப்பட்டு, சந்தைப்படுத்தப்பட்ட போது, அவற்றுக்கு சிறப்பான வரவேற்பு கிடைத்தது. அதனால், இன்று ஊறுகாய் முதல் சட்னி வரையில், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் அதிக அளவில் விற்பனைக்கு வருகின்றன.வாடிக்கையாளர்களுக்கு, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், இம்முறையில் பொருட்களை சந்தைப்படுத்துவதில், சிறு நிறுவனங்களும் போட்டி, போட துவங்கியுள்ளன.சென்னை, அண்ணாநகரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் சார்பில், மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி:இதே போல் தனியார் ஏற்றுமதி நிறுவனங்களும் மதிப்பு கூட்டு பொருட்களை தயாரிக்க பயிற்சி அளித்து வருகின்றன.சிறு விவசாயிகள் சந்தைப்படுத்தும் பணியின் போது, மதிப்பு கூட்டு பொருட்களாக சந்தைப்படுத்தினால், விற்பனை இலக்கு, லாபம் உள்ளிட்டவைகளை எளிதாக பெற முடியும். தற்போது, பேரீச்சை, அத்திப்பழம், நாவல் பழம், கிளாச்சிக்காய் உள்ளிட்டவைகள் கூட, மதிப்பு கூட்டப்பட்டு, அட்டை பெட்டிகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வரத் துவங்கி இருப்பது மதிப்பு கூட்டு பொருட்களுக்கு சந்தையில் கிடைத்து வரும் வரவேற்பை, எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

நடப்பு நிதியாண்டில் இதுவரையிலுமாக...வங்கிகள் கடன் வழங்குவதில் மந்த நிலை

மும்பை:நடப்பு நிதியாண்டில், இதுவரையிலுமாக, வங்கிகள் திரட்டிய டெபாசிட் சிறப்பாக அதிகரித்துள்ள போதிலும், வழங்கப்பட்ட கடன்கள் மந்த நிலையிலேயே உள்ளன.

இதை எடுத்துக்காட்டும் விதமாக, செப்., 7ம் தேதி வரையிலான காலத்தில், வங்கிகளின், கடன் மற்றும் டெபாசிட் விகிதம் 33 சதவீதம் என்றளவில் சரிவடைந்து உள்ளது.

இது, கடந்த ஆண்டு இதே காலத்தில், 43 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துக் காணப்பட்டது.நடப்பு நிதியாண்டில் இதுவரையிலுமாக, வங்கிகள் திரட்டிய டெபாசிட் 4.17 லட்சம் கோடி ரூபாய் என்ற அளவில் சிறப்பாக அதிகரித்துள்ளது.

இது, சென்ற நிதியாண்டின் இதே காலத்தில், 3.17 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.அதேசமயம், வங்கிகள் வழங்கிய கடன் 1.35 லட்சம் கோடியிலிருந்து, 1.38 லட்சம் கோடி ரூபாயாக சற்றே அதிகரித்துஉள்ளது. இது, வங்கி கடன் வளர்ச்சியின் மந்த நிலையை பிரதிபலிப்பதாக உள்ளது.எனினும், நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், வங்கிகள் வழங்கிய கடன் 1.49 லட்சம் கோடி ரூபாயுடன் ஒப்பிடும் போது, இரண்டாவது காலாண்டில் இதுவரையிலுமாக, 11,153 கோடி ரூபாய் குறைந்து, 1,38,064 கோடி ரூபாயாக சரிவடைந்துள்ளது.பொருளாதார சுணக்க நிலையால், நிறுவனங்கள், விரிவாக்க திட்டங்களை ஒத்திப் போட்டுள்ளன.

இதன் காரணமாக, நிறுவனங்கள், வங்கிகளிடம் கடன் வேண்டி விண்ணப்பிப்பது குறைந்துள்ளது.மேலும், கடன் பெற விரும்பும் பெரிய நிறுவனங்கள், வர்த்தக ஆவணங்கள் வாயிலாக, தனியார் நிதி நிறுவனங்களிடம், குறைந்த வட்டியில் கடன் திரட்டிக் கொள்கின்றன. ஆனால், வங்கிகள், அவற்றின் அடிப்படை வட்டி விகிதத்தை காட்டிலும், குறைவான வட்டியில் கடன் வழங்க இயலாது என, பொதுத் துறையைச் @Œர்ந்த முன்னணி வங்கியின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

| 24th Sep 20012 | பூக்கள் விலை சரிவால் விவசாயிகள் கவலை |
|---|---|



ப.வேலூர்:பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான, பரமத்தி, பாண்டமங்கலம், கபிலர்மலை, கரூர் மாவட்டம் சேமங்கி உள்ளிட்ட பகுதிகளில், கணிசமான ஏக்கர்களில் மலர் சாகுபடி செய்யப்படுகிறது. மல்லிகை, சம்பங்கி, அரளி, பட்டு ரோஸ் உள்ளிட்ட பூக்கள், மேற்குறிப்பிட்ட பகுதிகளில், சாகுபடி செய்யப்படுகின்றன.
பூ சந்தை:அவ்வாறு சாகுபடி செய்யப்படும் பூக்கள், ப.வேலூர் தற்காலிக பஸ் நிலையம் அருகே செயல்படும், தினசரி பூ ஏல மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. நாமக்கல், கரூர் மாவட்ட அளவில், இந்த பூ Œந்தை பிரசித்தி பெற்றது. எனவே, இவ்விரு மாவட்டங்களில் இருந்தும், ப.வேலூர் பூ Œந்தைக்கு, நாள்தோறும் ஏராளமான வியாபாரிகள் வருவது வழக்கம்.இந்நிலையில், சில வாரங்களாக உச்சத்தில் இருந்த பூக்களின் விலை, தற்போது அதல பாதாளத்திற்கு சென்றுள்ளது. குறிப்பாக, 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட, ஒரு கிலோ சம்பங்கி, 20ம் தேதி நிலவரப்படி, 80 ரூபாயாக சரிந்தது.
அதுபோல், 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட, ஒரு கிலோ மல்லிகை, 120 ரூபாயாகவும், 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட, ஒரு கிலோ அரளி, 100 ரூபாயாகவும், 200 ரூபாய்க்கு

விற்பனை செய்யப்பட்ட, ஒரு கிலோ பட்டு ரோஸ், 80 ரூபாயாகவும் குறைந்துஉள்ளது. இந்த திடீர் சரிவு, பூ விவசாயிகள், வியாபாரிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்து.ஆயுதபூஜை:பூ வியாபாரிகள் கூறியதாவது:ப.வேலூர், கரூர் மாவட்டங்களில், பூக்களின் விளைச்சல் நன்றாக உள்ளது. எனினும், சீசன் இல்லாததால், பூ விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. புரட்டாசி மாதம் என்பதால், எந்த விசேஷமும் நடக்காது. அதனால், ஒரு மாத காலத்துக்கு, பூக்களின் விலை இறங்கு முகமாகவே இருக்கும்.

எனினும், இவ்வாண்டு, எப்போதும் இல்லாத அளவுக்கு பூக்களின் விலை சரிந்திருப்பது, எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இனி, ஆயுதபூஜை சமயத்தில் பூக்கள் விலை ஏற்றம் அடையும் என்ற நம்பிக்கையில் உள்ளோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

23.09.2012 P.M

24.09.2012 A.M

24th Sep 20012 | 28-ல் வேளாண் குறைகேட்புக் கூட்டம்

ஈரோடு, செப்.23: ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் குறைகேட்புக் கூட்டம், வரும் 28-ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமை வகிக்கிறார்.

இதில், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம்.

24th Sep 20012 | மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைப்பு

மேட்டூர், செப். 23: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை வினாடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது.

கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்பட்டு வந்த தண்ணீர் இரு தினங்களுக்கு முன்பு நிறுத்தப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருந்த தண்ணீர் படிப்படியாக குறைந்து வந்தது.

ஞாயிற்றுக்கிழமை மாலை அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது. சம்பா நெல் சாகுபடிக்கு வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணையின் நீர் இருப்பு நாளொன்றுக்கு ஒரு டி.எம்.சி குறையத் தொடங்கியுள்ளது.

நீர்மட்டமும் நாள் ஒன்றுக்கு ஓர் அடி குறைந்து வருகிறது. சனிக்கிழமை மாலை 83.23 அடியாக இருந்த நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 82.40 அடியாகக் குறைந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 0.83 அடி குறைந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவது காவிரி டெல்டா பாசன விவசாயத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.
எதிர்வரும் நாள்களில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் சரியும் வாய்ப்பு உள்ளது என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 82.40 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3027 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. பாசனத்துக்கு வினாடிக்கு 15,006 கன அடி வீதம் திறக்கப்பட்டிருந்தது. நீர் இருப்பு 44.39 டி.எம்.சி.யாக இருந்தது.

23th sep 2012 P.M

23th Sep 20012 | மீன் வளர்ப்புத் திட்டத்தில் சேர செப். 28 -க்குள் விண்ணப்பிக்கலாம்

புதுக்கோட்டை, செப். 22: புதுக்கோட்டை மாவட்டத்தில் நன்னீர் நிலைகளில் மீன் வளர்க்கும் திட்டத்தில் இணைந்து செயல்பட பின்வரும் தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வி. கலைஅரசி வெளியிட்ட செய்திக்குறிப்பு:
தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்நாட்டு நன்னீர் நிலைகளில் ஒரு எக்டேருக்கு தற்போது பிடிக்கப்படும் மீன்களைவிட அதிகளவு மீன் உற்பத்தி செய்வதற்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
நீர்வள நிலவளத் திட்டத்தின் மூலம் எக்டேருக்கு 25 கிலோ என்றிருந்த மீன் அறுவடையை 250 கிலோவாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
பொதுப்பணித் துறை மூலம் தூர்வாரப்பட்ட பாசன ஏரிகள், வேளாண் பொறியியல் துறை அமைத்த பண்ணைக் குட்டைகளில் மீன் குஞ்சுகளை வளர்ப்பதன் மூலம், தமிழகத்தில் சுமார் 10 ஆயிரம் மெட்ரிக் டன் மீன் அறுவடை செய்ய முடியும். இதற்காக ஏரிகளுக்கு சுமார் 6.57 கோடி மீன் குஞ்சுகள் தேவைப்படும்.
புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தெற்கு வெள்ளாறு, பாம்பாறு, அக்னியாறு மற்றும் அம்புலியாறு வடிநிலப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட பண்ணைக் குட்டைகளில் மீன் குஞ்சுகளை வளர்த்தெடுக்கும் வகையில், விவசாயிகளின் சொந்த நிலங்களில் மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் அமைக்கவும், மீன் குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.
இத்திட்டத்தில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள், முன்னோடி விவசாயிகள், சமூக முன்னேற்றத்தில் ஈடுபடும் மேலாண்மை நிறுவனங்களும் விண்ணப்பிக்கலாம்.

சொந்த நிலத்தில் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைப்பது:
ஆற்று வடிநிலத்தின் பெயர், பயனாளிகளின் எண்ணிக்கை, திட்ட விவரம், திட்ட மானியம்:
அக்னியாறு வடிநிலம் - 6 பேர், 3 ஆயிரம் ச.மீ. பரப்பளவுள்ள நிலத்தில் 2,200 ச.மீ. நீர் பரப்புள்ள நுண்மீன் குஞ்சுகளை விட்டு சிறுமீன் குஞ்சுகளாக வளர்த்தெடுக்கவும், சிறுமீன் குஞ்சுகளிலிருந்து நன்கு வளர்ந்த மீன் குஞ்சுகளை வளர்க்கவும் தகுந்த நர்சரி, வளர்ப்புக் குளங்கள் அமைத்து ஆண்டுக்கு 4 லட்சம் விரலிகள் வளர்த்தெடுப்பதாகும். அலகு ஒன்றுக்கு ரூ. 4 லட்சம் மானியம்.

அம்புலியாறு வடிநிலம் - 6 பேர், தெற்கு வெப்0ளாறு வடிநிலம்-5 பேர், பாம்பாறு வடிநிலம்- 5 பேர்.

| 23th Sep 20012 | விவசாய இடுபொருள் வழங்கல் |
|---|---|

காரியாபட்டி, செப். 22: அருப்புக்கோட்டை அருகே கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கு இடு பொருள்கள் வழங்கும் விழா நடைபெற்றது.
அறிவியல்நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி தலைமை வகித்தார்.
மண்டல ஆராய்ச்சிநிலையத் தலைவர் செல்லையா முன்னிலை வகித்தார். பேராசிரியர் ராஜேந்திரன் வரவேற்றார்.
இதில் 150 விவசாயிகளுக்கு இடுபொருள்களான உளுந்து, மல்லி, பருத்தி பிளஸ் நுண்ணூட்டச் சத்துக் கலவை, மண்புழு உரம் ஆகிய பொருள்களை வைகைசெல்வன் எம்.எல்.ஏ. வழங்கினார். உதவி பேராசிரியர் ராதிகா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். நகர் செயலர் கண்ணன், அதிமுக. தொகுதி இணைச் செயலர் ராஜ்குமார், ஒன்றியத் தலைவர் (பொ) கொப்பையராஜ், நகர் எம்.ஜி.ஆர். இளைஞரணி முத்துராஜ், ஒன்றியக் கவுன்சிலர் சங்கரலிங்கம், அம்மா பேரவை சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உதவி பேராசிரியை ஜெகதீஸ்வரி நன்றி கூறினார்.

| 23th Sep 20012 | சிவகங்கையில் மூலிகைக் கண்காட்சி |
|---|---|

சிவகங்கை, செப். 22: சிவகங்கையில் மூலிகை கண்காட்சி நடைபெறுகிறது.

அரசு அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியை மாவட்ட வருவாய் அலுவலர் தனபால் தொடக்கி வைத்துப் பேசும்போது, பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் மூலிகை குறித்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதுபோன்ற கண்காட்சிகள்

நடத்தப்படுகின்றன. நாம் அன்றாடம் பயன்படுத்தும் உளுந்து, பயறு வகைகளிலும், காய்கறி, பழ வகைகளிலும் மருத்துவ குணங்கள் உள்ளன. எந்த வகை தாவரங்களாக இருந்தாலும் அவற்றுக்கு மருத்துவ குணம் உள்ளது. இதுபோன்ற தாவரங்களை மூலிகை எனக் கூறுகிறோம்.
இயற்கையோடு நாம் சேர்ந்து வாழக் கற்றுக்கொண்டால் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் வாழ முடியும் என்றார். நிகழ்ச்சியில் சிவகங்கை அரசு அருங்காட்சியகக் காப்பாளர் பக்கிரிசாமி, சித்த மருத்துவர் பாக்கியலெட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

23th Sep 20012 | காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் விடக் கோரிக்கை

கொடுமுடி, செப். 21: காலிங்கராயன் வாய்க்காலில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என காலிங்கராயன் பாசன சபை வலியுறுத்தியுள்ளது.
இது குறித்து பாசன சபை (532002) துணைத் தலைவர் நா.கங்கணன் வெளியிட்ட அறிக்கை:
இந்த ஆண்டு காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்திற்கு ஜூன் 16 ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. ஏப்ரல் 30 ஆம் தேதி வரை தண்ணீர் வழங்கப்படும் என மாவட்ட நிர்வாகம் அறிவித்தது. அதைத் தொடர்ந்து விவசாயிகள் பயிர் செய்துள்ளனர்.
இந்நிலையில், பவானி சாகர் அணை மூடப்பட்டது. இதனால் மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் வாடும் நிலையில் உள்ளன.
பல கஷ்டங்களுக்கு இடையில் இடுபொருள்களை கடனுக்கு வாங்கி பயிரிட்டுள்ள விவசாயிகள், தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் கருகும் நிலை கண்டு வேதனையில் உள்ளனர்.

இந்நிலையில், கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அரசு இதுவரை தொடர்ந்து வந்த முறையைப் பின்பற்றி காலிங்கராயனில் உடனடியாக தண்ணீர் திறந்துவிட்டு பயிர்களைக் காக்க வேண்டும் என அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

23th Sep 20012 | நாளை முதல் இயந்திரங்கள் செயல்முறை விளக்க முகாம்

நாகர்கோவில், செப். 22: தக்கலையில் வேளாண் பொறியியல் துறை மூலம் நவீன வேளாண் இயந்திரங்கள் செயல்முறை விளக்க முகாம் செப்டம்பர் 24, 25- தேதிகளில் நடைபெறுகிறது.
இதுகுறித்து தக்கலை உதவி செற்பொறியாளர் அலுவலகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:
வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திர செயல்விளக்க முகாம் நடைபெறுகிறது. இத் திட்டத்தின்கீழ் உதவி செயற்பொறியாளர் தக்கலை அலுவலகம்

மூலம் வேளாண் கருவிகளின் செயல் விளக்கம் நடத்தப்படுகிறது. செப்டம்பர் 24-ல் மணவாளக்குறிச்சி பெரியகுளம் ஏலா விவசாய சங்க அலுவலகம் அருகே சுழற்கலப்பை கருவி குறித்தும், அதே நாளில் மணவாளக்குறிச்சி பெரியகுளம் ஏலா அம்பலம் அருகே ஆழ உழும் கருவி குறித்தும் செயல்முறை விளக்கம் செய்து காட்டப்படும்.

செப். 25-ம் தேதி பேயன்குழியில் ஆழ உழும் கருவி பற்றிய செயல்முறை விளக்கமும், மாலையில் பரசேரியில் சுழற்கலப்பை குறித்த செயல்முறை விளக்கமும், சேரமங்கலத்தில் குழிதோண்டும் கருவி குறித்த செயல்முறை விளக்கமும் அளிக்கப்படுகிறது என்றார் அவர்.

23th Sep 20012 | கோரையாறுதலைப்பு அணை திறப்பு

நீடாமங்கலம், செப். 22: திருவாரூர், நாகை மாவட்ட விவசாயிகளுக்கு பயன்தரும் நீடாமங்கலம் அருகேயுள்ள கோரையாறுதலைப்பு (மூணாறுதலைப்பு) அணை சனிக்கிழமை திறக்கப்பட்டது. இதன்மூலம் 2.53 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும்.
திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் அருகேயுள்ளது கோரையாறுதலைப்பு அணை. கல்லணையிலிருந்து பெரியவெண்ணாறு வழியாக வரும் நீர் கோரையாறுதலைப்பிலிருந்து வெண்ணாறு, கோரையாறு, பாமணியாறு என மூன்று ஆறுகளின் வழியாக பாசனத்திற்கும், பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் பிரித்து அனுப்பப்படுகிறது.
மேட்டூர் அணை கடந்த 17-ம் தேதி திறந்துவிடப்பட்ட நிலையில், வெள்ளிக்கிழமை கல்லணை திறக்கப்பட்டது. இந்தத் தண்ணீர் கோரையாறுதலைப்பிற்கு சனிக்கிழமை அதிகாலை வந்தடைந்தது.
திருவாரூர், நாகை மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு பயன்பெறும் வகையில், கோரையாறு தலைப்பு அணையை உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ் சனிக்கிழமை திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன், மாவட்ட வருவாய் அலுவலர் ந. ஜீவகனி, திருத்துறைப்பூண்டி எம்.எல்.ஏ. உலகநாதன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர்கள் குணசேகரன், மணி, கலைச்செல்வன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, மாவட்ட வேளாண் இணை இயக்குநர் மயில்வாகணன், நீடாமங்கலம் ஒன்றியக் குழுத் தலைவர் எம்.ஆர். ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். வெண்ணாறு, கோரையாறு, பாமணியாறு ஆகியவற்றின் மூலம் திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சேர்ந்த 2,53,533 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

24.09.2012 A.M

24th Sep 20012

## குன்னூர் ஏலத்தில் தேயிலை விலை ரூ.3 குறைந்தது



குன்னூர் : குன்னூர் சிடிடிஎ தேயிலை ஏலமையத்தில் இந்தாண்டுக்கான 38வது ஏலம் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடைபெற்றது. மொத்தம் 12.48 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. ஏலத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் வருகை குறைந்தால், 70% தேயிலை தூள் விற்பனையானது. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.3 வரை விலை சரிந்தது. இலை ரகத்தில் சாதரண வகை கிலோவுக்கு ரூ.70 முதல் ரூ.73 வரை யி லும், டஸ்ட் ரகத்தில் சாதரண வகை கிலோவுக்கு ரூ.78 முதல் ரூ.88 வரை யிலும் விற்பனையானது.

24th Sep 20012

## 22 ஏக்கர் பரப்பளவில் சாடிவயல்பதியில் நெல் சாகுபடி நடவு பணி துவங்கியது

தொண்டாமுத்தூர், : கோவை அருகே சிறுவாணி மலை அடிவாரம் சாடிவயல்பதியில் வடக்கு பகுதியில் ஆதிவாசி மக்கள் விவசாயம் செய்ய நிலம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இங்குள்ள 25 ஏக்கர் பரப்பளவில், 22 ஏக்கரில் நெல் சாகுபடி நடவு பணி துவங்கியது. உயர்ரக பொன்னி அரிசி, விதை நெல் விதைக்கப்பட்டு, 16வது நாளில் நாற்றுகள் எடுக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.
பாரம்பரிய முறையில் விளைச்சல் அதிகரிக்க, பச்சரிசி, ஊதுபத்தி, கற்பூரம் ஏற்றி, வனதேவதை சாடி அம்மனை வணங்கினர். பிறகு தண்ணீர் நிரப்பப்பட்டு, உழவு செய்யப்பட்ட வயலில் நாற்றுக்களை பெண்கள் பாட்டு பாடி வரிசையாக நட்டனர்.
தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு நாற்றுகள் நடும் பணி நடைபெறுகிறது. 45 ஆதிவாசி குடும்பத்தினர் நெல் சாகுபடியில் மும்முரமாக ஈடுபட்டு உள்ளனர். நெல் வயலில் வன விலங்குகள் நுழையாதவாறு விடிய, விடிய சுழற்சி முறையில் காவல் காத்து வருகின்றனர். அப்பகுதியில் முக்கால் ஏக்கரில் மஞ்சள் மற்றும் 2 ஏக்கரில் பருத்தி நடப்பட்டது.
ஆதிவாசிகள் கோரிக்கை
சாடிவயல்பதியில் சாடியாறு துணையால் விவசாயம் நடக்கிறது. இந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால், சீங்குபதி, சாடிவயல்பதி ஆதிவாசி கிராமங்களில் மழையை நம்பி உள்ள வானம் பார்த்த பூமியில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.
இதனால் ஆதிவாசி மக்கள் 100 நாள் வேலை மற்றும் தோட்ட வேலைகளுக்கு செல்கின்றனர். எனவே சாடியாற்றில் ஆயில் இன்ஜின் மூலம் நீரை எடுத்து வானம் பார்த்த பூமியில் விவசாயம் நடக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் சாடிவயல்பதி மற்றும் சீங்குபதியில் தோண்டப்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் பயன்படாமல் கிணற்றில் போட்ட கல்லாக கிடக்கிறது. எனவே, ஆழ்குழாய் கிணறுகளுக்கு மின் மோட்டார் அமைத்து, தண்ணீரை விவசாயத்திற்கு பயன்பட உதவவேண்டும் என்ற கோரிக்கை எழுந்து உள்ளது.

24th Sep 20012

## வேளாண் திட்டப்பணி அதிகாரி திடீர் ஆய்வு

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி வட்டாரத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளை வேளா ண் துணை இயக்குனர் சதாசிவம் ஆய்வு செய்தார்.
தோட்டக்கலைத்துறை மூலம் அரவக்குறிச்சி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு அதிக மகசூல்

பெறுவதற்காக பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக நவீன தொழில்நுட்ப ஆலோசனைகளும் அளிக்கப்பட்டு வருகிறது. அரவக்குறிச்சியில் 100 சதவீத மானியத்தில் நுன்னீர் பாசன கருவிகள் அமைத்து அதன் மூலம் அதிக மகசூல் பெற்ற சிறு, குறு விவசாயிகளின் வயல் களை கரூர் துணை இயக்குனர் சதாசிவம் ஆய்வு செய்தார். கணக்குவேலம்பட்டி, புங்கம்பாடி, செந்தாம்பட்டி, ஈசநத்தம், ஆலமரத்துப்பட்டி, ஆண்டிபட்டிக்கோட்டை கிராமங்களில் சொட்டு நீர் பாசனம் அமைத்து மா, முருங்கை மற்றும் மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ஆலோசனைகளை அவர் வழங்கினார். மானாவாரி நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பந்தல் அமைத்து கொடிவகை காய்கறிகளை சாகுபடி செய்துள்ள ஈசநத்தம் கிராமத்தை சேர்ந்த விவசாயி கெங்கப்பன் வயல்களையும் பார்வையிட்டார். ஆய்வின் போது தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் வளர்மதி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 24th Sep 20012

## அமராவதி பாசன வாய்க்காலில் கழிவு கொட்டுவதை தடுக்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்

கரூர், : அமராவதி பாசன வாய்க்காலில் கழிவு பொருட்கள் கொட்டப்படுவதை தடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

கரூர் மாவட்ட மக்க ளின் குடிநீர் தேவைக்காக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணை யில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் இம்முறை கரூர் பகுதிக்கும் வந்துள்ளது. இதனால் குடிநீர் வினியோ கம் செய்ய தேவையான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். அமராவதி நீர் பாசன வாய்க்கால்களுக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது.

வழக்கமாக இந்த மாதங்களில் அமராவதி அணை யில் இருந்து வரும் நீரை பயன்படுத்தி கரூர் மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை, சோளம் போன்றவ ற்றை விவசாயிகள் சாகுபடி செய்வர். அமராவதி ஆற்றுநீர் ராஜவாய்க்கால் வழியாக பாசனத்திற்கு செல்கிறது. இதனையடுத்து அமராவதி ஆற்றுநீர் வர த்தை எதிர்நோக்கி ராஜவாய்க்கால் தூர்வாரப்பட்டது.

கரூர் மாவட்டம் பள்ளபாளையம் ராஜவாய்க்காலில் ஆண்டாங்கோயில் மேற்கு கிராமத்தில் மேற்கு எல்லை முதல் கிழக்கு நோக்கி ஆண்டாங்கோயில் கிழக்கு, இனாம் கரூர், பஞ்சமாதேவி, கோயம்பள்ளி, சோமூர் வரை பாசனத்திற்கு தண்ணீர் செல்கிறது. இந்த ராஜவாய்க்கால் மண்முடி, சீத்தை முற்கள் நிறைந்து இருந்தது அகற்றப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது, நீர்வரத்து அதிகமானால் விவசாயத்திற்கு நீர்செல்ல ஏதுவாக இந்த வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் நகர்ப்பகுதிகளில் உள்ள கழிவுகளை குறிப்பாக பிளாஸ்டிக் குப் பைகள் சீரமைத்த அமராவதி ராஜவாய்க்காலில் கொட்டப்படுகிறது. பசுபதிபாளையம் பாலத்தின் இறக்கத்தில் டாஸ்மாக் மதுபானக்கடை உள்ளது. இந்த கடையில் இருந்து பிளாஸ்டிக் கழிவுகள் அதிகளவில் வாய்க்காலில் கொட்டப்படுகிறது.

இதனால் பசுபதிபாளையம் அமராவதி வாய்க்காலின் ஒரு பகுதியில் பிளா ஸ்டிக் குப்கைள் மிதந்து கொண்டிருக்கின்றன. எனவே பிளாஸ்டிக் மற்றும் கழிவு பொருட்களை அம ராவதி பாசன வாய்க்காலில் கொட்டுவதை தடு க்க சம்பந்தப்பட்ட அதிகாரி கள் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

24.09.2012 A.M

24th Sep 20012

**பேரையூரில் 43 மில்லி மீட்டர் மழை பதிவு**
**4 ஆயிரம் ஏக்கரில் உழவு பணிகள் தொடக்கம்**

பேரையூர் பகுதியில் நேற்று முன்தினம் 43 மில்லி மீட்டர் அளவு மழை பதிவானது. இதன் எதிரொலியாக மானாவாரி விவசாயிகள் தங்கள் வயல்களில் உழவு பணிகளை தொடங்கி உள்ளனர்.

மழை தாமதம்

மதுரை மாவட்டம் பேரையூர் மற்றும் உசிலம்பட்டி பகுதி விவசாயத்தை அடி படையாக கொ டதாகும். குறி பாக பேரையூர் பகுதியில் விவசாயம் என்பது மழை பெய்தால் மட்டுமே நடக்கக்கூடியதாகும். பெரும்பாலான நிலங்கள் மானாவாரி நிலங்களாகவே உள்ளன.ஒவ்வொரு ஆ டும் ஆடி மாதமே விவசாயிகள் தங்களது மானாவாரி நிலங்களில் விதை பு பணியை மேற்கொ டு விடுவர். ஆனால் இந்த ஆ டு தென்மேற்கு பருவ மழை பொய்த்து விட்டது. இதனால் மழை பெய்யாதா என விவசாயிகள் தினமும் வானத்தை பார்த்தபடியே இருந்தனர். வயல்களும் காய்ந்து போய் பாளம் பாளமாக வெடித்து காண பட்டன.

மேலும் தரிசு நிலங்களில் புற்கள் கூட முளைக்காததால் கால்நடைகள் தீவனம் இன்றி பரிதவித்து வந்தன.

ஆறுதல் அளித்த மழை

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை டி.கல்லு பட்டி மற்றும் பேரையூர் பகுதியில் பலத்த மழை பெய்தது. இந்த மழை விவசாயிகளுக்கு ஆறுதலாக அமைந்தது. நேற்று காலை நிலவர படி பேரையூரில் 43 மில்லி மீட்டர் அளவு மழை பதிவாகியிருந்தது.

வற டு கிடந்த வயல்களும் ஈர பதமாகி விட்டது. புரட்டாசி மாதமும் தொடங்கிவிட்டதால் இனி வரும் காலங்களில் மழை பெய்யலாம் என விவசாயிகள் கருதுகின்றனர். அதனால் பேரையூர், டி.கல்லு பட்டி பகுதியில் உள்ள பா பையாபுரம், அரசபட்டி, சேர்வராயன்பட்டி, பெரியபூலாம்பட்டி, வன்னிவேலாம்பட்டி, கிளாங்குளம், குன்னத்தூர் உள்பட சுற்று புற பகுதி விவசாயிகள் நேற்று தங்களது உழவு பணியை தொடங்கிவிட்டனர். இவர்கள் மக்காச்சோளம், கம்பு, குதிரவல்லி, சோளம், பருத்தி, பாசி பயறு, உளுந்தம்பயறு உள்பட நவதானிய விதைகளை விதைக்க திட்டம் தீட்டி வருகின்றனர்.

இது குறித்து வேளா அதிகாரிகளிடம் விசாரித்தபோது “இந்த மழையால் தற்போது 4 ஆயிரம்

ஏக்கரில் விவசாயிகள் விதை பு பணியை தொடங்க உள்ளனர். மழை தொடரும்பட்சத்தில் 20 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி நடைபெறும்" என்றனர்.

| 24th Sep 20012 | பிசான பருவத்துக்கு ஏற்ற நெல் விதைகள் வேளா மை அதிகாரி தகவல் |
|---|---|

பிசான பருவத்துக்கு ஏற்ற நெல் விதைகள் பற்றி வேளா மை அதிகாரி தெரிவித்து உள்ளார்.

நெல் சாகுபடி

பிசான பருவம் என்பது 2–ம் போக சாகுபடி செய் ம் பருவத்தை குறிக்கும். இ பருவத்துக்கு ஏற்ப குறுகிய கால ரக நெல் விதைகளை ம், மத்திய கால ரக விதைகளை ம் விவசாயிகள் தேர்ந்தெடுத்து பயிரிட வே டும்.

குறுகிய கால ரகமான அம்பை– 16, 110–115 நாட்கள் வயதுடையது. அரிசி வெள்ளை நிறத்தில் குட்டையாக, தடிமனாக இருக்கும். ஆடுதுறை 45 ரகமோ நடுத்தர சன்னமாகும். அரிசி வெள்ளை நிறத்தில் இருக்கும். இதன் வயது 110 நாட்களாகும். இந்த விதைகள் சேரன்மாதேவி மற்றும் வீரவநல்லூர் வேளா மை விரிவாக்க மையத்தில் போதிய அளவு இரு பு வைக்க பட்டுள்ளன.

மகசூல்

தானியத்தில் இருந்து வேறுபட்ட ஓர் உயிருள்ள பயிரை உருவாக்கவல்ல கரு பொருட்களான சான்று பெற்ற விதைகளை விவசாயிகள் பெற்று பயன் அடை மாறு கேட்டுக் கொள்ள படுகிறார்கள். இதன்மூலம் எக்டருக்கு 300–400 கிலோ வரை கூடுதல் மகசூல் கிடைத்திட வாய் பு உள்ளது.

எனவே அம்பை–16, ஆடுதுறை–45 ஆகிய தரமான விதைகளை பயன்படுத்தி உயர் மகசூல் பெற்றிட விவசாயிகளை சேரன்மாதேவி வேளா மை உதவி இயக்குனர் சத்திய ஜோஸ், வேளா மை அலுவலர் பரத்வாஜ் கேட்டுக் கொ டுள்ளார்.

| 24th Sep 20012 | சம்பா சாகுபடிக்கு வழங்கிய மும்முனை மின்சாரத்தை குறைக்கக்கூடாது விவசாயிகள் கோரிக்கை |
|---|---|

சம்பா சாகுபடிக்கு வழங்கிய மும்முனை மின்சாரத்தை குறைக்கக் கூடாது என்று விவச ாயிகள் கோரிக்கை வைத் துள்ளனர்.

சம்பா பயிர்

கடலூர் மாவட்டம் சிதம் பரம், காட்டு மன்னார் கோவில் ஆகிய தாலுகா பகுதிகள் காவிரி டெல்டா பகுதியாக உள்ளது.இந்த பகுதியில் சம்பா சாகுபடியை விவசாயிகள் மேட்டூர் அணை காலதாமதாக திறந்ததால் மின்மோட்டார் மூலம் த ணீர் பாய்ச்சி நடவு பணியை தொடங்கி இருந் தனர்.

தமிழக அரசும் விவசாயிகள் நலன் கருதி சம்பா சாகுபடிக் காக 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கியது.இதை யடுத்து விவசாயிகள் இந்த மின்சாரத்தை பயன் படுத்தி சிதம்பரம், காட்டு மன்னார் கோவில் பகுதியில் விவ சாயத்தை தொடங்கினர்.இது தவிர சமுதாய நாற்றங் கால் அமைக்கவும் அரசு உத்தர விட்டது.இந்த அறிவி பை தொடர்ந்து விவசாயிகள் ஆழ்குழாய் பாசனம் மூலம் நாற்றங்கால் அமைக்கும் பணியை தீவிர படுத்தினர்.

மும்முனை மின்சாரம்

தற்போது ஒருசில இடங்களில் நடவு பணி செய்து பயிர்கள் வளர்ந்து வரும் நிலையில் உள்ளது.ஒரு சில இடங்களில் நாற்றங்கால் அமைத்து பயிர்கள் வளர்ந்து வருகிறது.இந்த நிலையில் மேட்டூர் அணையில் இருந்து கடந்த 17–ந் தேதி காவிரி, டெல்டா பகுதிக்கு த ணீர் திறந்து விட பட்டது.

அந்த ர் கடை , மடை பகுதியை வந்த சேர இன்னும் 15 நாட்களுக்கு மேல் ஆகும்.இற்கிடையில் விவசாயத்திற்கு அரசு வழங்கிய 12 மணி நேர மும்முனை மின்சாரத்தை திடீரென குறைத்து. அதற்கு பதிலாக 2 மணி நேரம் மட் டுமே மின்சாரத்தை மின்சார வாரியம் வழங்கி வருகிறது.இதனால் வளர்ந்துவரும் சம்பா பயிர்களுக்கு த ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள் ளது.

வற டு கிடக்கிறது

ஆகவே தமிழக அரசு மும் முனை மின்சார நேரத்தை குறைக்காமல் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்க வே டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.இது பற்றி வள்ளலார் விவசாய சங்க தலைவர் குஞ்சிதபாதம் கூறுகை யில், காவிரி டெல்டா பகுதியில் புரட்டாசி முதல் வாரத்தில் சம்பா நடவு தொடங்கி நடை பெறும்.

ஆடி மாதம் அனைத்து ர் நிலைகளிலும் த ணீர் பெருக் கெடுத்து ஓடும்.வீராணம் ஏரி யில் த ணீர் அதிகமாக கிடக் கும்.ஆனால் இந்த ஆ டு சம்பா நடவுக்கு ரின்றி வற டு கிடக்கிறது.விவசாயத்திற்கு 12 மணி நேரத்திற்கு பதிலாக 2 மணி நேரமே மின்சாரம் வழங்க ப டுகிறது.

ஆகவே மின்சாரத்தை தடை யின்றி வழங்க வே டும் என்றார்.

| 24th Sep 20012 | அட்மா திட்டத்தின் கீழ் வாழை நார் பிரித்தெடு பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி |
|---|---|

அட்மா திட்டத்தின் கீழ் வாழை நார் பிரித்தெடு பது குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் எஸ்.புதூரில் நடந்தது.

பயிற்சி முகாம்

கடலூர் அருகே உள்ள ராமாபுரம் ஊராட்சி எஸ்.புதூரில் வேளா விற்பனை மற்றும் வேளா வணிகத்துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் வாழை பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வாழை நார் பிரித்தெடுக்கும் பயிற்சி நடைபெற்றது.

இதற்கு கடலூர் வட்டார அட்மா குழுத் தலைவர் சந்திரகாசன் தலைமை தாங்கினார். ராமாபுரம் ரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் ஞானசேகரன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் அட்மா திட்டம் குறித்து கடலூர் வட்டார தொழில் நுட்ப மேலாளர் கமலா கார்த்தீஸ்வரி பேசினார்.

தொடர்ந்து வேளா மை இணை இயக்குநர் தனவேல், மற்றும் பிரசாத் ஆகியோர் கலந்து கொ டு பேசினார்கள்.

செயல்விளக்கம்

பயிற்சியில் வாழை நார் பிரித்தெடுக்கும் தொழில் நுட்பம், நார் எடுக்கும் இயந்திரம், வாழை நாரின் சிற பு அம்சங்கள் மற்றும் பயன்படும் விதம், வாழை நார் பிரித்தெடு பதில் பின்பற்ற வே டிய முக்கிய குறி புகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்க பட்டது. வாழை நார் பிரித்தெடு பது குறித்து விவசாயிகள் மத்தியில் ஞானசேகரன் செயல்விளக்கம் செய்து கா பித்தார். இதற்கான ஏற்பாடுகளை கடலூர் கோட்ட வோ மை அலுவலர் சுரேஷ், உதவி வேளா மை அலுவலர் ஆரோக்கியதாஸ் ஆகியோர் செய்திருந்தனர். முடிவில் உதவி வேளா மை அலுவலர் உதயபாஸ்கர் நன்றி கூறினார்.

| 24th Sep 20012 | அவலாஞ்சி, எமரால்டு ர்மின் அணைகளில் இருந்து பவானிசாகர் அணைக்கு த ணீரை திறந்து விட வே டும் கீழ்பவானி பாசன விவசாயிகள் சபை கூட்டத்தில் தீர்மானம் |
|---|---|

அவலாஞ்சி, எமரால்டு ர்மின் அணைகளில் இருந்து பவானிசாகர் அணைக்கு த ணீரை திறந்துவிட வே டும் என்று கீழ்பவானி பாசன விவசாயிகள் சபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற பட்டது.

பொதுக்குழு கூட்டம்

கீழ்பவானி முறை ர் பாசன விவசாயிகள் சபை பகிர்மான கமிட்டி பொதுக்குழு கூட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே குள்ளம்பாளையத்தில் உள்ள பாசன சபை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு, பகிர்மான கமிட்டி தலைவர் கே.என்.செங்கோட்டையன் தலைமை தாங்கினார்.

பாசன சபை தலைவர்கள் நடராசு, பிரகாசம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் குணசேகரன் வரவு செலவு அறிக்கையை தாக்கல் செய்தார். கீழ்பவானி முறை ர் பாசன விவசாயிகள் கூட்டமை பின் தலைவர் காசிய ணன், துணைத்தலைவர் ராமசாமி, செயலாளர் வடிவேலு ஆகியோர் சிற பு விருந்தினர்களாக கலந்து கொ டு பேசினர்.

ர்மின் அணைகளில் உள்ள...

கூட்டத்தில் நிறைவேற்ற பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

* கீழ்பவானி பாசன திட்டத்துக்கு 30 நாட்களுக்கு சிற பு த ணீர் வழங்க நடவடிக்கை எடுத்த தமி ழக அரசுக்கும், பொது பணித்துறை அதிகாரிகளுக்கும் விவசாயிகள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது.

* பவானிசாகர் அணையின் ர் இரு பை கருத்தில் கொ டு அவலாஞ்சி, எமரால்டு ஆகிய ர்மின் அணைகளில் தேக்கி வைக்க பட்டுள்ள த ணீரை பவானிசாகர் அணைக்கு திறந்து விட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வே டும்.

* கீழ்பவானி பாசன திட்டத்தில் ரூ.3 கோடி செலவில் நடைபெற்று வரும் திருகு தடு பான்கள் பொருத்தும் பணி தாமதமாகி வருகிறது. எனவே, விவசாயிகளின் நலனை கருத்தில் கொ டு வருகிற டிசம்பர் மாதத்திற்குள் அனைத்து திருகு தடு பான்களை ம் பொருத்தித்தர பொது பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வே டும்.

ஆக்கிரமி புகளை அகற்ற வே டும்

* 1959–ம் ஆ டு வயல்–வர புச் சட்டத்தின்படி கொ பு வாய்க்கால்களில் செய்ய பட்டு உள்ள ஆக்கிரமி புகளை அகற்ற வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வே டும்.

* மஞ்சள் விவசாயிகள் மாநாட்டில் அறிவித்தபடி, ஒரு குவி டால் மஞ்சளை ரூ.9 ஆயிரத்துக்கும் குறைவாக விற்காமல் முழு ஒத்துழை பு கொடு பது.

* கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள கரட்டு பாளையம், நல்லாம்பட்டி, கடுக்காம்பாளையம் ஆகிய 3 கசிவு ர்த்திட்டங்களின் பராமரி பு பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வே டும் என்று பொது பணித்துறை அதிகாரிகளை கேட்டுக் கொள்வது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன.

சட்டத்தொகு பு புத்தகம் வெளியீடு

முன்னதாக, "ஏரி குளங்களில் ஆக்கிரமி புகளை அகற்றுதல் சட்டத் தொகு பு" என்ற புத்தகம் வெளியிட பட்டது. அதை கூட்டமை பு தலைவர் காசிய ணன் வெளியிட, பகிர்மான கமிட்டி தலைவர் செங்கோட்டையன் பெற்றுக் கொ டார்.

இந்த கூட்டத்தில், உதவி நிர்வாக என்ஜினீயர் ராஜ், உதவி என்ஜினீயர் சதீஸ்குமார் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொ டனர். பகிர்மான கமிட்டி செயலாளர் பா.மா.வெங்கடாசலபதி வரவேற்று பேசினார். முடிவில், பாசன சபை துணைச் செயலாளர் நந்திவர்மன் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| **24th Sep 20012** | ரூ.1 கோடி செலவில்<br>சிமோகாவில் காய்கறி, பழங்கள் பத படுத்தும் குளிர்பதன கிடங்கு<br>துணை முதல்–மந்திரி ஈசுவர பா அடிக்கல் நாட்டினார் |

சிமோகாவில் ரூ.1 கோடி மதி பில் காய்கறி மற்றும் பழங்கள் பத படுத்தும் குளிர்பதன கிடங்கு அமை பதற்கான அடிக்கல்லை துணை முதல்–மந்திரி ஈசுவர பா நாட்டினார்.

குளிர்பதன கிடங்கு

சிமோகாவில் ஆ காம்ஸ் என்று அழைக்க படும் சிமோகா மாவட்ட தோட்டம் மற்றும் வேளா கூட்டுறவுச் சங்கம் சார்பில் காய்கறிகள், பழங்கள் விற்பனை நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த விற்பனை நிலையத்தில் காய்கறிகள், பழங்களை பத படுத்தும் வகையில் குளிர்பதன கிடங்கும் ரூ.1 கோடி செலவில் அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிலையில் இந்த குளிர்பதன கிடங்கு அமை பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆ காம்ஸ் தலைவர் சோமசேகர பா தலைமை தாங்கி பேசினார். நிகழ்ச்சியில், துணை முதல்–மந்திரி ஈசுவர பா கலந்துகொ டு அடிக்கல்லை நாட்டி வைத்து பேசினார். அ போது அவர் பேசும் போது கூறியதாவது:–

ஒரு ஆ டில் பணி முடி ம்

ரூ.1 கோடி செலவில் அமைக்க படும் இந்த குளிர்பதன கிடங்கு பல அமை பு அடுக்கு அறைகள் கொ டது. நவீன தொழில்நுட்பத்துடன் இந்த குளிர்பதன கிடங்கு அமைக்க பட உள்ளது. இதற்காக மாநில அரசின் வேளா கழகம் ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த பணிகள் இன்னும் ஒரு ஆ டுக்குள் நிறைவடைந்துவிடும். அதன் பின்னர் திறந்து விவசாயிகளும், வியாபாரிகளுக்கும் அர் பணி பு செய்ய படும். விவசாயிகள் மீது அக்கறை கொ டு அரசு இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**24th Sep 20012**

**மேட்டூர் அணைக்கு ர்வரத்து 3 ஆயிரம் கன அடியாக குறைந்தது**

மேட்டூர் அணைக்கு ர்வரத்து 3 ஆயிரம் கன அடியாக குறைந்தது.

மேட்டூர் அணை திற பு

தென்மேற்கு பருவமழை சரியாக பெய்யாததால் மேட்டூர் அணைக்கு ர்வரத்து குறைந்தது. இதனால் அணையின் ர்இரு பு அதிகரிக்க இல்லை. ஆகவே இந்த ஆ டு ஜூன்மாதம் டெல்டா பாசனத்துக்கு திறக்க பட வே டிய மேட்டூர் அணை 90 நாட்கள் காலதாமதாக கடந்த 17–ந்தேதி திறக்க பட்டது. அ போது அணையின் ர்மட்டம் 84 அடியாக இருந்தது. இரு பினும் வடகிழக்கு பருவ மழையை கருத்தில் கொ டு மேட்டூர் அணை திறக்க பட்டது.

காவிரி நடுவர்மன்றத்தின் இடைக்கால தீர் பின்படி கர்நாடகம் தமிழகத்துக்கு த ணீரை அளிக்காததால் கர்நாடகத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு 2 டி.எம்.சி. த ணீரை வழங்க வே டும் என்று தமிழக அரசு சு ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. கடந்த மாதம் 12–ந்தேதி முதல் கடந்த 20–ந்தேதி வரை வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி த ணீரை கர்நாடகம் தமிழகத்துக்கு அளிக்க சு ரீம் கோர்ட்டு உத்தரவு பிற பித்தது. இந்த உத்தரவுபடி கர்நாடகம் தமிழகத்துக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் அளித்த வந்த த ணீரை கடந்த 20–ந்தேதி நிறுத்தி விட்டது.

ர்வரத்து குறைந்தது

இதைத்தொடர்ந்து பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெற்ற காவிரிநதி ர் நடுவர்மன்ற கூட்டத்தில் கர்நாடகம் வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி த ணீரை தமிழகத்துக்கு அளிக்க பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டார். இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய வே டும் என்று கர்நாடக முதல்–மந்திரி ஜெகதீஷ் டைட்லர் கூட்டத்தில் இருந்து வெளிநட பு செய்தார். இதனால் கர்நாடகத்தில் இருந்து மேட்டூர் அணைக்கு தற்போது த ணீர்வரத்து இல்லை. தற்போது அணையில் உள்ள ர் இரு பு டெல்டா பாசனத்துக்கு முழுமையாக போதுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே வடகிழக்கு பருவமழை கைகொடுத்தால் மட்டுமே இந்த ஆ டு டெல்டா பாசன விவசாயிகளை

கா பாற்ற முடி ம்.

மேட்டூர் அணைக்கு தற்போது வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் வந்து கொ டு இருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் வெளியேற்ற படுகிறது.